தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 3, சனிக்கிழமை.

சித்திரை 20, அட்சய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்."

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திரையரங்குகளில் இருக்கை, இதர வசதிகள்.

607—(* வினா எண். 1879) — திரு. சைதை. சா. துரைசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் இருக்கை வசதி சுகாதார வசதிகள் இல்லாத திரையரங்குகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) திரையரங்குகளில் துப்புரவு நிலைமைகளையும், இருக்கை வசதி களையும் பாதிக்கக்கூடிய குறைபாடுகள் ஏதும் காணப்பட்டால், உரிமம் வழங்கும் அதிகாரிகள் கடும் நடவடிக்கைகளை திரை யரங்கு உரிமைதாரர் மீது எடுக்கின்றனர்.

தமிழ்நாட்டில் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாளுக்கு முற்பட்ட மூன்று ஆண்டுகளில் 182 திரையரங்குகளின் மீது இட வசதி மற்றும் சுகாதார வசதிகள் சரிவர செய்யாத தற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் சில திரை அரங்குகளில் 'சி' படிவ உரிமம் ஒரு நாள் முதல் 3 மாதங்கள் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மற்றும் சில திரை அரங்கு களில் உரிமம் புதுப்பிக்கப்படாமலும், சிலவற்றில் 'சி' படிவ உரி மத்தை நிறுத்தி வைத்து 'இ' படிவ பர்மிட் வழங்கப்பட்டும் உள்ளன. வேறு சில திரை அரங்குகளுக்கு குற்றங்களுக்காக அபாரதம் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை விதிக்கப்பட்டும், சிலவற் றிற்கு கடுமையாக எச்சரிக்கப்பட்டும் உள்ளன.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் குறிப்பாக அண்ணா சாலையி லுள்ள திரையரங்குகள் எல்லாம், குறைந்தது வருடத்தில் ஒன்பது மாதங்களாவது தமிழ்ப் படங்களை திரையிட வேண்டுமென்று விதியிருந்தும், அப்படிப்பட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவ தில்லை. அந்த விதியை நடைமுறைப்படுத்தாத திரையரங்குகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதற்கு திரைப்பட ஒழுங்கு விதிகள் சட்டத்தின் கீழ் ஒரு அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. அதை எதிர்த்து ஒருசிலர் வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். ஆகவே அதை விதிகளில் சேர்த்து இப்போது புதியதாக இந்தச் சட்டத்தினுடைய ஒரு பகுதியாக அது மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே எதிர்காலத்தில் இந்த விதிகளுக்கு உட்படாமல் யாராவது இருந்தால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியேட்டர்கள் சம்பந்தப்பட்ட விதிகள் தொடர்பாக நான் இதனைக் கேட்கிறேன். சென்னை மாநகரில் திரையிடப் படுகிற திரைப்படங்கள் குறிப்பாக தமிழ்ப் படங்களுக்கு சென்சார் போர்டு இருப்பதைப்போல வெளி மாநிலங்களிலிருந்து இங்கே திரையிடப்படுகிற திரைப்படங்களுக்கு கணிக்கை இருக்க

1986 மே 3]

வேண்டும். குறிப்பாக மலையாளப் படங்கள் எல்லாம் ஆபாச சுவரொட்டிகளையும், ஆபாச தலைப்புகளையும் கொண்டு இங்கே திரையிடப்படுகின்றன. ஆகவே எப்படி தமிழ்ப் படங்களை சென்சார் செய்து காட்டுகிறோமோ அதைப்போல இங்கே திரையிடப்படுகிற எல்லா மாநிலப் படங்களையும் சென்சார் செய்து காட்டுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா? அப்படிப்பட்ட ஆபாச தலைப்புகளும், சுவரொட்டிகளும் தமிழ்ப் படங்களில் வருவதில்லை, வேற்று மொழிப் படங்களில்தான் வருகின்றன. ஆகவே அவைகள் இங்கே சென்சாருக்கு உட்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

அகஸ்தியர் மற்றும் மணிமுத்தாறு அருவி பகுதிகளை

சுற்றுலா மையமாக்கல்.

608 — (*வினா எண் 5672) **திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவி ஆகிய இடங்களை சுற்றுலா மையங்களாக அறிவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் அகஸ்தியர் அருவியில் அமைந்துள்ள பாபநாசம் என்ற இடம் மாவட்ட உலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பெற்று மேம்படுத்த 5.86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மணிமுத்தாறு அருவியை சுற்றுலாத்தலமாக மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாபநாசம் ஸ்தலத்தை இந்த வருடம் சுற்றுலாத் தலமாக அக்க திட்டப் பணிகள் நடைபெறுகின்றன என்று கூறியதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும்